# நாசகாரக் கும்பல்

ஆசிரியர்:
நையாண்டி பாரதி



சாந்தி நிலைய வெளியீடு

VENDHAN

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை
https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில்
காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at
https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

வல்லிக்கண்ணன்

# நாசகாரக் கும்பல்


ஆசிரியர்:

நையாண்டி பாரதி



சாந்தி நிலையம்

53, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு

மௌண்ட் ரோடு: P. O., சென்னை 2.

"சாந்தி நிலைய" வெளியீடு 8
முதல் பதிப்பு ஜூலை 1948
விலை அணா எட்டு

## சமர்ப்பணம்

சிரிக்கத் தெரிந்தவர்களின் சிரிப்புக்கும் சிந்தனைக்கும் இலக்காகின்ற நாசகாரக் கும்பலுக்கு—தங்களைத் தாங்களே உணர்ந்து, சிரிக்கவும், சிந்திக்கவும் கற்றுக் கொள்வதற்காக!

Printed at The Royal Printing Works, Mount Road ,Madras

# கடவுளும் சைத்தானும்

நாட்டு நலம் கெடுக்கும் நாசகாரக் கும்பல்களின் பட்டியல் ஒன்று தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. காகிதத்தைப் பரப்பி பேனவை எடுத்து வைத்துக்கொண்டு தலையைச் சொரிய ஆரம்பித்தேன். இந்தப் பட்டியலில் முதல் ஸ்தானம் யாருக்குக் கொடுக்கலாம் என்ற பெரிய கவலை எனக்கு எழுந்து விட்டது.

அப்படியே தூங்கிவிட்டேன் என்று தான் நினைக்கிறேன். இல்லையென்ருல் 'மகனே, நான் தான் கடவுள். உனது பட்டியலிலே சைத்தான் பெயரை முதலில் இட்டு' என்று சொல்லி முன்னல் நின்ற உருவத்தைப் பற்றி என்ன சொல்ல முடியும்.

ஆமாம். அது கனவாகத் தான் இருக்க வேண்டும். அப்படித் தான் இருக்க முடியும்,

'மகனே! உலகம் எப்படி இருக்கிறது என்று பார்க்க வந்தேன். உலகமென்ன! சுத்த மோசமாகத் தானிருக்கிறது' என்ருர் அவர்.

'அது உருப்படாது சுவாமிகளே! இப்படிப்பட்ட உலகத்தைப் படைத்துவிட்டு அதன் லெட்சணத்தைப் பார்த்து மகிழ வேறு வந்துவிட்டீர்களாக்கும்!' என்று கேட்கத்தான் விரும்பினேன். ஆனல் எழவெடுத்த வார்த்தைகள் தாறுமாருக உதிர்ந்து விட்டன. நான் கேட்டு வைத்தது இது தான்—

'ஆமா. கடவுள் செத்துப் போனர் என்று சிலர் சொன்னர்களே!'

'எல்லாம் அந்தச் சைத்தானின் வேலையாகத் தான் இருக்கும். பிசாசுப் பயல் தனது சாம்ராஜ்யத்தை பூலோகத்திலே நிலை நாட்டி விட்டான். இனி மேல் உலகம் உருப்படுவதேது!' என்றார் கடவுள்.

'சிந்தித்துப் பார்த்தால்...' என்று தொடங்கவும், கடவுளானவர் உரத்த குரலில் கத்தினார்; 'சிந்தனை ஒரு பிசாசு. சிந்தனை சைத்தானின் ஏவல் தான். அது தான் உலகத்தை—மனிதவர்க்கத்தை — உருப்படாமல் அடிக்கிறது!'

'ஸ்வாமிகாள்! நீங்கள்......'

நான் சொல்வதற்குள் அவர் அடியோடு மறைந்து விட்டார். எனது அறையில் இருள் தான் நிறைந்திருந்தது. விளக்கிலே எண்ணெய் இல்லை. திரிகூட இல்லை என்று தான் தோன்றியது.

தொலைந்து போகிறது என்று பேனாவை மூலையிலே தள்ளி விட்டேன். என் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது.

'உலகம் உருப்படாது' என்று சில அறிஞர்கள் சொல்கிறார்களே, அது சரிதானா?

எனது மனம் உலகத்தை விட்டுவிட்டு தமிழ்நாட்டைச் சுற்றி அலையத் துடித்தது. 'உலகம் உருப்படுகிறது; உருப்படாமல் நாசமாப் போகிறது! தமிழ் நாடு உருப்படக் காணுமே இன்னும், ஏன் உருப்பட வில்லை! மனிதவர்க்கத்தை உய்விப்பான் வேண்டி வந்த அறிஞர்கள், தலைவர்கள், பெரிய மனிதர்கள், கலைஞர்கள் இப்படிக் கொம்பர்கள் எவ்வளவோ பேர்கள் பணியாற்றியும் கூட நாடு ஒரு அடி கூட முன்னேறவில்லையே. காரணம் என்ன?'

நாட்டிலே நாசகாரக் கும்பல்கள்—சைத்தானின் புத்திரபாக்கியங்கள் அல்லது தத்துப்பிள்ளைகள்—பெருத்துப்போனதுதான் காரணம். அத்தகைய நாசகாரக் கூட்டம் யார் யார்?

எனது கருத்தில், எல்லாத் துறைகளிலும் நாசகார முளைகள் தலைதூக்கிச் செழிப்புற்று விட்டதாகவே படுகிறது. அறிவுலகம், கலை உலகம், அரசியல் உலகம், பொருளாதாரம், வியாபாரம் எல்லா உலகங்களும் சைத்தான்களின் ஆதிக்கத்திலேயே சுழல்கின்றன. அவற்றில் ஒரு கோணப் பார்வை மட்டுமே பிரதி பலிக்கப்பட்டிருக்கிறது இங்கே. இது கோணல்ப் பார்வையாகக் கூடப் படலாம் சிலருக்கு! ஆனால் அது என் தவறாகாது.

நாடக உருவிலே வளர்ந்துள்ள 'லட்சியவாதி'களை அறிமுகம் செய்து கொண்டு உங்கள் கருத்தைச் சீர்தூக்கிப் பாருங்களேன்.

இன்னும் பல கோணங்களிலும் பலவிதமான பிரகிருதிகளைப் பற்றியும் எழுத வேண்டும். இந்தச் சிறு புத்தகத்தில் கும்பலிலே கோவிந்தா போட்டு வாழ்கிற சிறு கூட்டத்தோடு மட்டுமே சந்திப்பு நடத்த முடிகிறது.

அவசியம் ஏற்படுமானால் அப்புறம் பார்த்துக் கொள்ளலாமே!

நை. பாரதி.

# லட்சியவாதிகள்!

இடம்: சோம்பலையே தொழிலாகக் கொண்ட—ஆனா லும் சமூகத்தில் தாங்களே உயர்ந்த பிறவிகள் என்று சொல்லிக் கொண்டு திரிகிற—'அறிஞர்கள்' சிலர் கூட வசதியான ஏதாவது ஒரு இடம். கஞ்சா மடமாக இருக்க வேண்டும் என்றில்லை! காப்பி ஹோட்டலில் ஒரு அறை அல்லது எந்த அறிஞரின் வீட்டில் ஒரு அறை அல்லது மொட்டை மாடி அல் லது கட்டாந்தரை—இத்தகைய ஒரு இடம்!

காலம்: கணக்கே யில்லை. அதிகாலையைத் தவிர எந் நேரமாகவும் இருக்கலாம். இரவு பன்னிரண்டு மணி யாகக் கூட இருக்கலாம்!

பாத்திரங்கள்: அறிஞர்கள்—அதாவது தங்களைத் தாங் களே அறிஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர் களும், பரஸ்பரம் அப்படி முகஸ்துதி செய்பவர் களும், 'ஆமாஞ்சாமிகள்' ஒன்றிரண்டு பேரும்!... வசதிக்காக பெயர்கள் கொடுத்திருக்கிறேன்.

ஸ்ரீமான் சோணாசலம் —பேரறிஞர்.

மிஸ்டர் சொள்ளமுத்து—ஒரு மாதிரியான அறிஞர்! அதாவது 'கொஞ்சம் லூஸ்' என்பது மற்றவர்கள் கருத்து.

அறிவழகனார் அவர்கள் —தமிழ்ப்பித்தர்.
உயர்திரு கனகராயர் —அரசியல் பித்தர்.
ஸ்ரீலஸ்ரீ தில்லையம்பலம் —கவிதைக் கிறுக்கர்.
தோழர் கடவுள் —கம்யூனிஸ்ட் பித்தர்.
சாரதாதேவி அம்மையார்—சொஸைட்டி லேடி.
கனகம் —அம்மையார் வீட்டில் வேலை பார்க்கும் பெண்.

## மறந்து விடாதீர்கள்!

எனது நாடகம் உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமாயினும் நடைபெற்றிருக்கலாம். நடைபெற்றுக்கொண் டிருக்கலாம். நடைபெறலாம். நடைபெறாமலும் இருக்கலாம். ஆனால் ஒன்று. இது தனிப்பட்டவர்களைக் குறிக்கவில்லை. இதில் வரும் பாத்திரங்கள் உண்மையில் உலவும் பாத்திரங்கள் இல்லை. சும்மா வெறும் நாடகம் இது. அவ்வளவுதான்!

●

## முதல் காட்சி

ஸ்ரீமான் சோணாசலம் ஈஸிசேரில் சாய்ந்திருக்கிறார். 'சாய்ந்திருக்கிறார்' என்பதைவிட விழுந்துகிடக்கிறார் என்று சொல்வதே ஏற்கும். முதுகெலும்பற்றவர் போல் கிடக்கிறார்.

மிஸ்டர் சொள்ளமுத்து தனக்குத் தானே சிரிக்கும் பாவத்தில் அமர்ந்திருக்கிறார். நாடகம் முழுவதும் இவர் முகபாவம் இஃதே! அசல் பைத்தியம் போல் தோன்றுகிறார்.

அறிவழகனாரும் கனகராயரும் மேஜைக்கு முன் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

●

அறிவழகனார்: யான் அறைவது என்னெயெனில் ஆள வந்தார்கள் அவ்வப்போது அருமையான செயல்கள் ஆற்றுகின்றனர். எனினும் இஃது ஆனைப் பசிக்கு அரிசிப் பொரி என்ற கணக்குத் தான். சில நீதி மன்றங்களில் தமிழை ... ... ...

சோணாசலம்: நிறுத்தித் தொலையுமய்யா உம்ம உளறலை! சுத்த தலைவேதனையாக இருக்கு. சுத்தத் தமிழு, சுத்தத் தமிழுன்னு அடித்துக் கொள்வது அர்த்த மற்றது. என்ன சாதிச்சிடுவீர் உம்ம தமிழை வைத்துக் கொண்டு?

அறி: என்னதான் முடித்தல் இயலாது? உணர்த்துக!

சோணா: உம்ம தமிழிலே ஸோடா பாட்டிலுக்கு சொல் என்னய்யா? ஸெக்சுக்குப் பதம் எங்கே? ஹைகோர்ட் என்றால் எவனுக்குப் புரியலே? உயர்தர நீதிமன்றமாம்! ஸைக்கிள் கூடாதாம். மிதிவண்டி என்பார் ஒருவர்; உந்து ஊர்தி என்று திருத்துவீர் நீர். துவிச்சக்கர வண்டி என்று கெடுப்பார் ஒருவர்.

அறி: அது தமிழே யல்ல. சிறிது கேண்மின்!

சோணா: என்ன கேண்மின்! கேளுங்கள் என்று சொன்னால் என்னவாம்?

அறி: அது கிடக்க. பார்க் என்பதைப் பூங்கா எனவும் 'பீச்'சை கடற்கரை என்றும் மாற்றுதலை யான் மெச்சுகின்றேன். எனினும் ஜங்ஷனை சந்திப்பு என்றுரைக்குதலைவிட, கூடல் எனப் போடல் தமிழ் மரபுக்கு இயற்புடைத்தாக அமையும்.

(தில்லையம்பலம் வருகிறார்.)

தில்லை: (நாற்காலியில் உட்கார்ந்தபடி) பேஷ்! 'கூடல் எனப் போடல்' ரொம்பவும் கவிதையாக இருக்கிறது. (முனங்குகிறார்)

கூடல் எனப் பதில் போடல்
மடமானே! சரியாகுமடி தேனே!
கூடல் தனை நாடு மெனை விட்டு
ஓடல் சரியோடி ஒயில்க் கண்ணே!

சோறு: அபாரமடா அண்ணே! நீதான் கவிஞன். மணிக் கவிஞன். புரிவதுதான் கவிதை. புரியாதபடி கூவிளங்காய், பொருவிளங்காய், தேமாங்காய் என்று இலக்கண எழுவுகளின்படி... ... ...

அறி: பொருவிளங்காய் என்று ஒன்று இல்லே.

கனகராயர்: (தூங்கிக் கொண்டிருந்தவர் விழித்தெழுந்து) பொருவிளங்காயா! ஏது? நம்ம தில்லேயம்பலம் கொண்டு வந்தாரா?

சோறு: ஹொஹ்ஹொஹ்! சொப்பனம் கண்டீரா வோய்!

கனக: புலவர் சொன்னீரென்று கேட்டேன்.

சோறு: இது இலக்கணக் கவிதைக் காய்! தின்பண்டம் அல்ல.

கனக: ஓ, லேசுத்தான்! நான் நினைத்தது வேறே, எங்க பாட்டி பொருவிளங்கா செய்து தந்தால் ரொம்ப ஜோராக இருக்கும். ஒரு வருஷமானாலும் கெட்டுப் போகாது. சுத்தியல் வச்சில்லா உடைக்கணும்கிறேன்! அப்படி உடைச்செடுத்து வாயிலே போட்டுக் கொண்டால், ஆகா!.........எனக்குத் தோணுது, இது விஷயமாக ஒரு இயக்கமே காணலாம்னு...

அறி: பொருவிளங்காய் இயக்கம் கொல்!

கனக: இல்லே. நமது மாண்பு மிக்க தமிழ் நாட்டுத் தின்பண்டங்கள் தலையெடுக்கவொட்டாமல் ஒடுக்கப் பட்டுள்ளன. வீட்டிலே, ஓட்டலிலே, எங்கு பார்த்தாலும் ஜாங்கிரி, பாதுஷா, டில்லி பாதுஷா, மலாய் காஜா, குளாப் ஜான், கான்பூர் கான், கல்கத்தா ரஸகுல்லா, பெங்கால் பூரி, பாம்பே உப்புமா, பூனு பர்பி,

மைசூர் பாகு என்று வடநாட்டுப் பண்டங்கள் பெருத்துவிட்டன. தமிழ்ப் பண்டங்களைச் சுரண்டி ஒழித்துவிடும் அபாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. நமது மதிப்புக்குரிய சிடை எங்கே? அன்புக்குரிய முறுக்கு எங்கே? தேன்குழல், முந்திரிக்கொத்து, இன்னோரன்ன அருமைப் பண்டங்கள் இல்லையா? தோழர்களே, தமிழன் தாழ்வுற்றது போதாதென்று......

அறி: தமிழ் தாழ்வுற்றது.

கனக: ஆமாம். தமிழ் தாழ்வுற்றது போதாதென்று, தமிழ்ப் பண்பாடுகள், ஈடுபாடுகள் எல்லாவற்றையும் ஒழித்துக் கட்டியதோடு தமிழகத் தின்பண்டங்களையும் மண்ணோடு மண்ணாக்கி விட்டார்களே! இதை ஒழிக்க ஒரு இயக்கம் காண்பது பொருந்தாதா என்ன?

அறி: ஏற்கும் ஏற்கும்! சாலவும் ஏற்புடைத்தாகும்!

சோணு: பேஷ்! ரொம்ப நல்லாப் பிரசங்கம் பண்ணுகிறீர்.

தில்லை: அபாரம் ஐயா அபாரம்! (பாடுகிறார். இசை விதிப்படி அல்ல. தனி முறையில்!)

மாண்புறு தமிழர் போற்றிய
பண்டங்கள் வீழ்ந்தன ஐயோ!
மண்ணிலே யாம் உய்வம் கொல்லோ!
ஓட்டலில் வீட்டில் எல்லாம்
நீட்டி முழக்கிடு பெரும்பேருற்ற
உப்பிலாப் பண்டங்கள் கொழுத்தன.
குப்பையில் கொட்டுவோம் அவற்றை!
முறுக்கெனில் முறுக்கேறுது மீசை.
முறுக்கும் மிடுக்கும் பிறக்குது தானாய்!

தேன்குழல் என்னும் போதே, தம்பீ !
தேன், தேன், மகிழ்வுத் தேன் உளமெலாம் !
கெட்ட பாவிகள் கெடுத்தனர் அஃதை
பட்டராம் மிச்சராம், கேண்மின் கேண்மின் !
மூட்டாள்கள் இட்ட பேரை ! ஐயோ !
ஓட்டுவோம் உவப்பிலாச் சிறுமை யெல்லாம் !

சோணு : ப்ரம்மாதம் ! ரொம்பப் ப்ரமாதம் ! நீரல்லவா கவி ! உம்மை ஆஸ்தான கவிராயராக்கும்படி ஆள வந்தார்களுக்கு அவசியம் சிபார்சு செய்ய வேண்டும் ...என்ன மிஸ்டர் சொள்ளமுத்து, நீர் என்ன சொல்கிறீர்...அட, தூங்கிவிட்டீரா !

சொள் : தூங்கவா ! அதெப்படி முடியும் ?

சோணு : கண்களை மூடிக்கொண்டு நீட்டி நிமிர்ந்தால், தூக்கம் தானாக வருது ! அது எப்படி முடியுமாம் ! என்ன யோசனை யற்ற பேச்சு, பாருங்க. அதான், நமக்கு இன்னும் பேசவே தெரியலே. நமக்குன்னு இந்த சமூகத்துக்கு. இன்றைய சமூகத்தின் வாலை முறுக்கி, தார்க்குச்சி கொண்டு குத்தி சரியான பாதையிலே செல்லும்படி வழிகாட்ட வேண்டியிருக்கு.

சொள் : நீங்களே அந்தக் கைகாட்டியாக இருங்களேன் !

கனக : இல்லே ஸார்...மிஸ்டர் சோணு, நீங்க சொல்றது ரொம்ப சரி. ஒரு இயக்கம் தேவைதான். பொறுப்புகள் ஏற்பட்டாலும் பரவால்லே. ஏதோ போது ஜன உபகாரம், சமூக சேவை, என்றெல்லாம் வரும் போது பொறுப்புகள் ஒரு பெரிசா ? தலைவர்னு எல்லாத்தையும் சகிச்சிட்டுத்தான் போகணும். அதனாலே, என்னையே தலைவராகப் போட்டு, நம்ம கட்சியைத் தொடங்கிடலாமே.

சோணு : (ஏமாற்றத்தோடு) ப்சு, என்ன கட்சி போங்க! உள்ள கட்சி போதாதாக்கும். இது ஒரு புதுக்கட்சி வேணுமா!

கனக : மற்றக் கட்சிகள் கவனியாமல் விட்டிருக்கிற எவ்வளவோ முக்கிய பிரச்னைகளை கவனிப்பது யார், பின்னே? என்ன ஸார் சொல்றேள், மிஸ்டர் அறிவழகர்வாள்?

அறி : கட்சி பற்றி யான் குறை எதுவும் உரைப்பதற்கில்லை. ஆனால் ஒன்று. தமிழ் வளர்ச்சி அதன் உயிர் மூச்சாக வேண்டும்.

கனக : அதுவும் நம்ம லட்சியங்களிலே ஒண்ணு தானே. என்ன மிஸ்டர் சொள்ளமுத்து! நம்ம கட்சி ஸெக்ரட்டரியாக இருங்களேன்.

சொள் : எனக்கு அந்தப் பொறுப்பெல்லாம் சரிப்படாது, ஸார்.

கனக : கடமையைத் தட்டிக் கழிக்க சோம்பேறியாக ...

சொள் : சோம்பேறியாவது! கலைஞன் ஐயா! சோம்பேறி என்பவன் சாதாரண ஆசாமி. கலைஞன், எழுத்தாளன், அரசியல் வாதி, கவிஞன் இவர்கள் எல்லாம் சோம்பிக் கிடக்க உரிமை பெற்றவர்கள். ஆனால் சோம்பேறிகள் அல்ல. சோம்பல் என்பது இல்லாமலே போகுமானால், அப்புறம் கலை ஏது, காவியம் ஏது! இலக்கியம், அரசியல் சேவை என்பதெல்லாம் ஏது!

கனக : அரசியலை அப்படி அலட்சியப்படுத்தாதிங்க. அரசியல்வாதி சமூகசேவை செய்பவர்களில் சிறந்தவன், தெரியுமா!

சொர் : அதெல்லாம் ஒண்ணுமில்லே. வேலே ஒன்றும் செய்ய முடியாமல், வீண் பேச்சுப் பேசி ஊரை ஏய்த்து, பதவிப் பித்து பிடித்தலேபவன் அரசியல் வாதி !

கனக : நிதானமாய் பேசுங்க பிரதர் !

சொர் : நிதானம் தவற நான் என்ன தண்ணி போட்டிருக்கேனு !

சோமு : நான் சொல்கிறேன், பெரிய மனிதர்கள் 'தண்ணி போடுவது' சகஜமானது. பெரிய மனுஷாளுகளுக்கு உரிய அடையாளங்களில் இதுவும் ஒன்று.

அறி : அப்படியாயின், மதுவிலக்கு முதல்வன ... ...

தில்லே : ஊருக்கு உபதேசம் !

சொர் : தலேவன் என்ருல் என்ன அர்த்தம்? மற்றவர்கள்தான் சொல்கிறபடி நடக்கவேண்டும்; தான் தனது சௌகர்யம் போல் நடந்தால் அதைப் பற்றி யாரும் எதுவும் சொல்லக்கூடாது என்று எதிர் பார்க்கிறவன் என்பது பொருள்—நவயுக தர்மப்படி !

தில்லே : ஓ! நம்ம கனகராயனுர் சரியான தலேவர் தான்னு சொல்லுங்க.

கனக : நீர் சொன்னதை நான் ஆட்சேபிக்கிறேன். இதை நீர் கண்டிப்பாய் வாபஸ் பெற்ருகணும்.

சோமு : அர்த்தமற்ற பேச்சு ! சொன்னது சொன்னது தானே ! சொன்னதை எப்படி வாபஸ் பெற முடியும்? வார்த்தைகள் என்ன பட்டாணிக் கடலேயா, பொரிகடலேயா !—சிந்தி விட்டோம். பொறுக்கி எடுத்து வாயிலே போட்டுக் கொள்ளலாம் என்ப

தற்கு!...ஹஹ்ஹா!...என்ன மிஸ்டர் சொள்ளு முத்து? எப்படி...எப்படி நான் சொல்றது?

சொள்: சுத்த ஹம்பக்!

சோணு: எது, என் பேச்சா? நான் சொன்னதா?

சொள்: இல்லை மிஸ்டர். இந்த வாபஸ் பெறுவது, ஆட்சேபிப்பது, ஆமோதிப்பது, அது இதுங்கிறது தான்! பாருங்க. முதலிலேயே தேர்தல் கிர்தல்னு வச்சு, இன்னார்தான் தலைவர், இவர் அப்படி, அவர் இன்னார் என்றெல்லாம் முடிவுகட்டி விடுகிறாங்க. அப்புறம் கூட்டம்—அல்லது மகாநாட்டின்—போது கூட ஒருவர் எழுந்து 'ஸ்ரீமான் இவர்களை தலைவ ராகப் பிரரேபிக்கிறேன். தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்' என்பதும், மற்றவர் 'அதை நான் ஆமோதிக்கிறேன்' என்பதும், வேறு சிலர் 'ஆதரிக்கிறேன்' என்று பத்து நிமிஷங்கள் அளப்பதும் சுத்த சுய விளம்பரத்தன மல்லாமல் வேறு என்ன? இது மாதிரி எவ்வளவோ ஹம்பக்ஸ்!

சோணு: ஆமாமா. அர்த்தமற்றவைதான், மிஸ்டர் சோணு, நீர் ரொம்ப நன்றாகச் சிந்திக்கிறீர். உம்மைப் போலே தமிழ் நாட்டிலேயே மூணு, நாலு பேரு தான் சிந்திக்க முடியும்—நான், நீர், இன்னும் ஒன்றிரண்டு பேர் இருக்காங்க ... நீர் ஏனய்யா துணிச்சலா ஒரு கட்சி ஆரம்பிக்கப்படாது?

கனக: நம்ம கட்சி தான் இருக்குதே!

தில்லை: எனக்கு ஒரு 'ஐடியா' இருக்கு.

சோணு: என்னன்னு கேட்கணுமாக்கும்! தோணறதைச் சொல்லுமே...நம்மளவங்க கிட்டே இது தான் ஒரு கெட்ட வழக்கம்—எவ்வளவோ கெட்ட வழக்கங்கள் இருக்கு. இதுவும் ஒண்ணு.

தில்லே: ஒரு கட்சி தொடங்கி, நம்ம அம்மையாரைத் தலைவராக்கி நாம் 'ஸப்போர்ட்' பண்ணினுல் என்ன?

கனக: விச் அம்மையார்?

சொள்: ஸ்ரீமதி சாரதாதேவி அம்மையார் அவர்கள் தான். ஸ்ரீலஸ்ரீ வேறு யாரை சிபார்சு செய்வாக?

சோணு: பேஷ்! பிரமாதமான ஐடியா!

## காட்சி 2

*சொள்ளமுத்து தனியாக உட்கார்ந்திருக்கிருர். பழைய இடம் தான். மத்தியான நேரம். கனக ராயர் வருகிருர்.*

கனக: என்ன மிஸ்டர் சொள்ளமுத்து, ஏது இப்டி ...

சொள்: சும்மா தான் இருக்கேன்.

*கனகராயர் சிரிக்கிருர்.*

சொள்: என்ன? ஏன் சிரிக்கீக?

கனக: இல்லே. நம்ம பேரறிஞர் இப்போ இருந்தால், உடனே சீறுவார்—சும்மா எப்படி ஐயா இருக்க முடியும்? இதுதான் நம்மளவங்களுக்கு பேசவே தெரியலே அப்டி இப்டீன்னு ... ...

சொள்: அவன் ஒரு ஹம்பக் ஸார்! அவனெப் போயி பிரமாதமா ... ...

கனக: (திகைப்புடன்) என்ன மிஸ்டர் சோணு, நீங்க அவரை ... ...

சொள்: அவனுக்கு என்ன ஸார் தெரியும்? பேரறிஞும்! பேருக்கு அறிஞன். தேட்ஸால்!

கனக: உமக்கு நம்ம சோணுசலத்தைப் பிடிக்காதா?

சொள்: எந்த ஹம்பக்ஸையும் எனக்குப் பிடிக்காது.

கனக: அவர் உம்மைப் பத்தி பிரமாதமாச் சொன்னரு. ஊரிலேயே உம்மைப் போலே சிந்திக்கிறவங்க மூணு நாலு பேருதான் உண்டுன்னு சொன்னரே.

சொள்: சுத்த ஹம்பக்! இவ்வளவு துணிச்சலாகச் சிந்திப்பவர்கள் மூணு நாலு பேர்களாம்!

கனக: பாருமேன்! அவர் பெயரையும் சேர்த்து ... ...

சொள்: அவன் என்ன ஸார் கண்டான்! தமிழ் நாட்டிலேயே துணிச்சலாகச் சிந்திக்கக் கூடியது யாராவது உண்டு என்றால், அது நான் மட்டும் தான்! இது தான் உண்மை.

கனக: (மீண்டும் திடுக்கிடுகிறர்) என்னது? அட பரமசிவம்!......எவ்வளவு மகத்தான தலைக்கனம்.

சொள்: தலைக்கனமாவது!—சுத்த அகங்காரம்! மகத்தான தன்னம்பிக்கை—ஹிமாலயத் தன்னம்பிக்கை! என் தலை கனக்குமானல் அது எனக்கல்லவா கஷ்டமய்யா!

கனக: இப்ப யாரு எப்படிப்பட்டவங்க என்றே சொல்ல முடியிறதில்லே.

சொள்: முடியட்டாப் போவுது, பிரதர்! நேற்று ஒரு விஷயம் கவனிச்சேளா?

கனக: என்னது?

சொள்: கட்சி, தலைவர் என்றெல்லாம் பேச்சு அடிபட்டுதே, அப்போ... ...

கனக: நீங்க அவசரப்பட்டீக என்கிறது பிறகு தான் உங்களுக்குப் புரிஞ்சிதாக்கும்! ஹெ ஹெ!

சொள்: அதில்லே! நீரென்ன சுத்த அவசரக் குடுக்கையா இருக்கேரே!

கனக: பின்னே ?

சொர்: நொண்ணே! விசயத்தைச் சொல்ல வந்தா ஊடு பாவு ஒட்டிக்கிட்டு—என்னய்யா நீரு!

கனக: கோபப்படாதீங்க பிரதர்; விசயத்தைச் சொல்லுங்க.

சொர்: நீங்க முதல்லே ஒரு கட்சியை ஆரம்பித்திடலாம், வழிகாட்றதுக்குன்னு சொன்ன போது ...

கனக: என்னையே தலைவராப் போடலாம்னு சொன்னேன்.

சொர்: அப்பதான்—நம்ம சோணு. முகத்தை கவனிச்சேளா ?

கனக: இல்லையே !

சொர்: அடடா! 'விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை'ங்கிறதை மறக்கலாமா! அன்றாட வாழ்விலே உம்ம கண்கள் பங்கியடிச்சவன் பார்வை மாதிரித் தேங்கிடப்படாது; எல்லோரையும் பார்வையாலே எடைபோடத் தெரியணுமய்யா.

கனக: அது கிடக்கு. விசயம் ?

சொர்: அப்போ அவர் முகத்திலே ஏமாற்றம் பெரிய போஸ்டர் எழுத்திலே எழுதி ஒட்டப்பட்டது! நீங்க கவனிக்கலியே !

கனக: அது சரி. இதுலே நம்ம சோணுவுக்கு என்ன ஏமாற்றமாம் ?

சொர்: அட அண்ணே ஏ மொண்ணேய்னு எங்க கெமிஸ்ட்ரி வாத்தியான் அடிக்கடி சொல்லுவான். அதைத் தான் உமக்கு நான் இப்ப சொல்ல வேண்டி யிருக்கு !

கனக: ஏங்?

சொள்: சின்ன விஷயத்தைக்கூட உம்மாலே புரிஞ்சு கொள்ள முடியலியே. நீரு தலைவரா வேறே வரணும்னு பறக்கிரு! ஹி! ஹி!

கனக: தலைவருக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? தலைவரானப்புறம் நல்ல திறமை சாலியாப் பார்த்து அந்தரங்கக் காரியதரிசி, ஆலோசனையாளர்கள் எல்லாம் ஏற்படுத்திப் போடுவேனு சும்மா வா! ஹே!

சொள்: அது தானே உலக வழக்கம்! அது போகுது. நீங்க ஒரு கட்சி தொடங்கி அதற்குத் தலைவராக உங்களையே ஏற்படுத்த வேணும்னு சொன்ன போது, மிஸ்டர் சோணசலம் ரொம்ப ஏமாந்து போனார். அவர் பெயரை நீங்கள் தலைவர் என்று பிரரேபிச்சிருக்கணும். அப்போ எதிர்த்திருக்கவே மாட்டார்.

கனக: பார்த்தேளா! அது தான் என்ன கட்சி, புதுக் கட்சின்னு இழுத்தாப்லே பேசினாராக்கும்! பாருங்க, நம்மளவங்க கிட்டேயே ஒற்றுமை இல்லையே! ஊம்! அப்புறம் எப்படி ஸார் சமுதாயம் உருப்படும்?

சொள்: உங்களைப் போலே இருந்தால் மட்டும் உருப்பட்டுவிடுமாக்கும்! தலைமைப் பித்து பிடித்தலைகிற அரசியல்வாதிகள் இருக்கிறவரை எதுவும் உருப்படாது. சுயநலமாக தன்னை பொம்மைக் கடவுளாக்கி, தன்னைப் பற்றி பஜனை பாட ஒரு கும்பல் கூட்டுவது தானே ஐயா தலைவர்கள் ஆகத் துடிப்பவர்களது லட்சியம்! உம்ம லட்சியமும் அது தானே! பிரமாதமான பொதுநலத் தொண்டு ஆசை வந்து விட்டதாக்கும் உமக்கு! ஹம்பக்!

கனக: மிஸ்டர் சொனு! சுத்த சொள்ளமுத்தாயிடு திரே சில சமயங்களில். கொஞ்சம் யோசிச்சு ...

சொன்: யோசிக்க வேண்டியது நீரும், உம்மைப்போல ஊரை எத்தித் திரிகிற வீணர்களும் தான் தெரியுமா! கட்சியாம், தலைவராம்! உண்மையாகவே உருப்படியா ஏதாவது செய்யணும்னு நீர் நினைத்திருந்தா நான் தலைவன், நான் தலைவன்னு மாரடிக்க மாட்டீரே வே! கூலிக்கு குலாம்கள் சேர்க்கிற குள்ளநரித்தலைவர்களால் நாட்டுக்கு என்ன பயன்? என்ன கட்சிகள்! என்ன தலைவர்கள்! நீர் தலைவர். உம்ம தலைமை பிடிக்காமல் போனால், நான் ஒரு தலைவராகி எனக்கொரு கட்சி கண்டு விடுகிறேன். நம்மைப் பிடிக்காத சோணாசலம் தனக்கொரு கட்சி தொடங்கி, தனித்தலைவராகி விடுகிறார். அவருக்குப் பிடித்தமான அம்மையாரைத் திருப்திப் படுத்த; அவளைப் பொம்மைத் தலையாக்கி தனக்கொரு கட்சி என்று தில்லையம்பலம் தொடங்குவார் இப்படித் தானே ... ...

கனக: (கோபமாக எழுந்து) சல்லிப் பயல்! சுத்த சின்னப்பயல்! (வெளியேறுகிறார்)

சொன்: நீர் சுத்த வெ. ப.—அதாவது வெறும் பயல்! போம்! (சிரிக்கிறார்)

கனகராயர் வேகமாக வெளியேறும்போது எதிரே தில்லையம்பலம் வர, இருவரும் மோதிக் கொள்கிறார்கள். கனகராயர் முறைத்து விட்டுப் போகிறார்.

தில்லை: ஹலோ!... என்ன இது?

(பேசாமல் போகும் அவர் பக்கமே பார்த்து நின்று பின் உள் வந்து நாற்காலியில் உட்காருகிறார்.)

என்னவே சொறு! நம்ம கடுவன் பூனே உர்ருன்னு போவுது! எலி பிடிக்கப் போகுதோ?

சொள்: தனக்கு மணி கட்டக்கூடிய எலிகளைத் தேடிப் போகும். வேலையென்ன வேறே! கட்சி ஆரம்பிக்கப் போருராமில்லே கட்சி!

தில்லை: நல்ல வேளை, ஞாபகப்படுத்தினீர்!... என்ன விஷயம்ணு, சாரதாதேவிகிட்டே சொன்னேன். அது தான் கட்சி தொடங்குவதுபற்றி! அம்மையார் ரொம்பத் தீவிரமா இருக்காய்யா!

சொள்: இந்தக் காலத்து அம்மையார்ளே அப்படித் தான். எதிலே வேண்டுமானாலும் தீவிரம் காட்டத் தயார்.

தில்லை: நான் எதிர் பார்க்கலே. சும்மா சொன்னேன். நேத்து. அப்புறம் அவகிட்டே இன்னைக்கு காலையிலே இப்படி இருக்கு விசயம்னு சொன்னேன். அவ என்னடான்னு ஓஹோஹோன்னு திட்டம் போட ஆரம்பிச்சிட்டா. நிஜமாவே இன்ட்ரஸ்ட் எடுத்து...

சொள்: இதுலே என்ன ஆச்சர்யமிருக்கு! நவயுக அம்மையார்கள் வெளிச்சம் போட்டு பிறர் கவனத்தைக் கவரவே தவிக்கிருர்கள். அதனலேதான் சொஸைட்டி லேடீஸ், கிடீஸ்னு ஒரு உடை உடுத்தி, தனி நடை நடந்து கிளம்பிடுருளுக! இப்படி ஒரு சான்ஸ் வரும்போது...ஹெஹ்ஹ...

தில்லை : இப்ப ஏண்டா நாம் பேச்செடுத்தோம்னு ஆயிட்டுது. அவளைத் தலைவியாக்கி கட்சி தொடங்கி நடத்தலேன்னு என்னை அவள் சும்மா விடமாட்டாபோலிருக்கு, அவ தலைவியாறதுக்கு லாயக்கா என்ன ! ஹே !

சொள் : பொதுவா அம்மையார்கள் வேறே விஷயங் களுக்குத்தான் லாயக்கு ! ஹஹ ! கட்சி, தலைமை, சமூக சேவைன்னு வந்திடுதுக... ஹ ஹ் !

தில்லை : என்ன செய்யலாம் மிஸ்டர் சொளு? ஏதாவது யோசனை சொல்லுங்களேன். அவளைத் தலைவியாக்கி ஒரு கட்சி தொடங்கலாமா? நீர் காரியதரிசியாக

சொள் : சேச்சே எனக்கு என்னத்துக்கு ஸார் இந்த எழவெல்லாம் ! ஊரிலே சிரிச்சுத் துப்பப்போருன் ஐயா, பிறகு !

வெளியே குரல் : மிஸ்டர் சொள்ளமுத்து !... ஹல்லோ மிஸ்டர் சொளு !

சொள் : (மெதுவாக) யார்ரா அவன் சைத்தான் மாதிரி! (உரக்க) யாரு பிரதர் அது ? உள்ளே வாங்க ஸார் சும்மா !

தில்லை : (உள்ளே வந்தவரைப் பார்த்து) ஓ கடவுளா ! வாருமையா வாரும் ! ஹம்...

கடவுள் : ஜெய் ஹிந் !

சொள் : உட்காருங்க பிரதர் !

கடவுள் : (உட்கார்ந்து) உலகம் வரவர ரொம்ப மோச மாப் போகுது பிரதர்.

சொள் : ஆமா. வாழ்க்கை ரொம்ப ட்ரை,...காயுது வே காயுது...ஊம்...

கடவுள் : முதலாளிகள்பாடு பரவால்லே. பாட்டாளி மக்களின் துயரம் ரொம்ப அதிகமாகிறது. முதலாளிகளின் சுயநலமும் சுரண்டலும்; கருப்பு மார்க்கட்காரர்கள் கயவாளித்தனமும்...

தில்லே : மிஸ்டர் மிஸ்டர் ! கொஞ்சம் பொறுங்க ! வந்ததும் வராததுமாகவே பிரசங்கம் பண்ணத் தொடங்கிட்டீரே, தோழரே.

சொள் : பிரசங்கம் பண்ணுவதுதானே தோழர் வேலே ! தோழரும் சரி, கிராமபோன் பிளேட்டும் சரி !

கடவுள் : பூர்ஷ்வாத்தனமான பேச்சு ! டிஜெனரேட்டட் ரெனிகேட்ஸ் தான் இப்படிப் பேசுவாங்க

சொள் : தெரியும் பிரதர் உங்கள் வண்டவாளங்கள் ! மார்க்ஸுக்கும் லெனினுக்கும் மச்சான்கள் கிற நெனப்பிலே தான் நீங்கள்ளாம் பேசுறது. அட பேசிட்டுப் போம்வே ! மத்தவன்களுக் கெல்லாம் ஒண்ணும் தெரியாது, முட்டாள்கள்னு நினேச்சுட்டு, உம்ம லட்சியம்தான் உசந்ததுன்னு பேசுதீரே அது தான் எனக்குப் பிடிக்கலே.

கடவுள் : எங்கள் மார்க்ஸ் சொல்லியிருக்கார்......

தில்லே : அவர் என்ன வேண்டுமானுலும் சொல்லிவிட்டுப் போருரு ! பாவம் நல்ல மனுஷன் ! செத்துப் போனுரு. நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லுங்களேன். அவரு சொன்னுரு இவரு சொன்னுருன்னு வீணுக......

சோள் : தாங்கள் மெத்தப் படிச்சவங்கன்னு பம்மாத்துப் பண்றத்துக்கு ஒரு வழி இது! பொதுவா எல்லோருமே, இப்படிச் செய்யத் தயங்குவதில்லே—என்னையும் பெர்னுட்ஷாவையும் தவிர!ஷா தன்னையே அத்தாரிட்டியாக எடுத்து 'கோட்' பண்ணுவானய்யா! இப்படி நான் சொல்லி யிருக்கிற மாதிரி—இதுபோல் எடுத்துச் சொல்ல, போதிய மெய்த்துணிவு வேணும் பிரதர்!

தில்லை : உம்மிடம் அது இருக்குதுங்கிறீரா! ரொம்ப சந்தோஷம். என்ன தோழர் கடவுள், எங்கே வந்தாப்லே?

கடவுள் : இந்தப் பக்கமா வந்தேன். வந்ததோ வந்தாச்சு, நம்ம சங்கப் பலகையையும் பார்த்துட்டுப் போகலாமே, யாராவது இல்லாமலா போவாங்கன்னு எட்டிப் பார்த்தேன்.

சோள் : பார்த்தேளா, ரொம்ப சந்தோஷம்! அப்புறம்? ...ஹஹ்...ஹஹ...

தில்லை : மிஸ்டர் கடவுள்! இவர் சரியான சொள்ளமுத்துதான்—அதாவது, சுத்த ஓூஸ்! ஏனய்யா இப்ப சிரிக்கிறீர்?

சோள் : வந்து, எனக்கொரு எண்ணம் திடீர்னு தோணுச்சு.

தில்லை : என்னவாம்?

சோள் : கடவுள் இல்லேங்கிறுக. இருக்காருங்கிறுக. இருந்து செத்துப்போனுருன்னு ஒருவர் சொல்கி

ருர்' அப்படில்லாம் பேச்சு அடிபடுதா? இப்போ நம்ம தோழர் கடவுள்னு பேரு வச்சுகிட்டு அலையு தாரு பாருங்களேன்.

தில்லை: ஆமா. இதுலே புதுசா என்ன கண்டுபிடிச்சிட் டீர்?

சொள்: திடீர்னு நம்ம தோழர் செத்துப்போனூர்னு வையுங்க, அட, அவர் சாகவேண்டாமையா! நன் ருக, அபாரமாக வாழட்டும்! சும்மா பேச்சுக்காக சொல்றேன். அப்போ பேப்பர்களில் நியூஸ் அடி படும்போது ஒரு நிமிஷம் தமிழ்நாடே 'டக்கூன்னு' திகைச்சுப்போயி நிக்குமா இல்லையா? என்ன!... 'கடவுள் மாரடைப்பால் மாண்டார்'...'கடவுள்மீது மிலிட்டரி லாரி! 'கடவுளைக் குண்டர்கள் தாக்கினர்' ...கடவுளுக்குக் கடுங்காவல்' —இப்படி நியூஸ் வந் தால்! இதை எண்ணும்போதே சிரிப்பு பொங்கி வருகுது. என்ன மிஸ்டர் கடவுள், நீங்கள் என்ன சொல்றீக?

கடவுள்: ஹிஹி...

தில்லை: சரியான மூனு ஐயா நீர்! சிந்திச்சிட்டாலும் பிர மாதமா!...மிஸ்டர் கடவுள், நீங்க ஏதாவது சொல் லுங்களேன்

கட: மொட்டைமாடி முதலாவது மகாநாடு நடத்த எண்ணியிருக்கிறோம்.

தில்லை: பேஷ்! தலைவர் யாரு?

கட: இன்னும் தீர்மானிக்கலே. நீங்களே தலைமை வகித்து...

இல்லே: நான் எதுக்கய்யா!

சோள்: மிஸ்டர் கடவுள் விளையாட்டுக்கில்லே. உண்மையாகவே சொல்றேன். ஸ்ரீமதி சாரதாதேவி அம்மையாரை தலைவராக்குங்கள். மகாநாடு ரொம்பப் பிரமாதமாக நடைபெறும். நல்ல விளம்பரமும் கிடைக்கும்.

இல்லே: தம்பி சொள்ளமுத்து, நீர் வாழ்க! உம் ஞாபக சக்தி நன்ருக வாழ்க! உமது சிந்தனை நன்ருக தடித்துக் கொழுத்து வளம்பெறுக! ...மிஸ்டர் கடவுள், இது ரொம்ப நல்ல யோசனை. மிஸஸ் ஷாரடாடேவி அம்மியார்—ஐ மீன், அம்மையார்—இருக்காகளே, ரொம்ப அருமையான பிரசங்கி.

சோள்: அம்மையாருக்கு பேசத்தெரிந்தால் என்ன! தெரியாமல் போனு என்ன! பொதுவா, அம்மையார்களுக்குப் பிரசங்கம் பண்ணத் திறமை வேணும் கிற அவசியமே கிடையாது. அம்மாளுக அப்டீ இல்லு அலங்காரம் பண்ணிக்கொண்டு ஐம்னு மேடைமேலே நின்ருலே போதும். சபை அப்படியே சொக்கிப்போகுமா சும்மவா! அதிலும் அம்மையார்ஸ் அப்படியும் இப்படியும் ஆடி அசைந்து—உளறிக்கொட்டினலும் பரவால்லே! பார்வையை 'கிய்னு' கூட்டத்து மேலே மேயவிட்டுச் சுழட்ட வெற்றிக்குக் கேட்பானேன். அப்புறம் சாகிறவரைக்கும் மனுஷங்க—மகாநாட்டுக்கு வந்தவங்க தான் இந்த மகாநாட்டையும் அம்மையாரையும் மறந்திட முடியுமா?

கட: எனக்கு ஸ்ரீமதியைத் தெரியாதே.

தில்லை : அதனாலென்ன நான் ஏற்பாடுபண்றேன். நீங்க அம்மையாரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கலாமே.

கட : ஆமாமா. பேப்பர்களில் எல்லாம்தான் பேரு அடி படுதே.

சொள் : அதென்ன பிரமாதம்! நீரும் டேரிப் படி சார்ஜ் கொடுத்து, மேட்டர் எழுதிக்கொடுத்தால், உம்ம பேரும் பிரமாதமா அடிபடும் பேப்பர்லே உமக்கிஷ்ட மான போல்டு டைப்களிலேகூடப் போட்டுக்கிட லாம் வே!

கட : விளம்பரம்தான் எல்லாம் கிறேளா?

சொள் : பின்னே பெரியார்ஸ் அன் அம்மையார்ஸ் காசு கொடாமலே விளம்பரப்படுத்தப்படுகிறார்கள். நீரும் நானும் பர்ஸ் கனத்தைக் குறைச்சால், பேரு தானாக அடிபடும். அவ்வளவுதான் வித்தியாசம்.

தில்லை : சொள்ளமுத்து மூளை எப்பவாவது நேரான பாதையில் போனால்தானே!...மிஸ்டர் கடவுள், வாருமய்யா நாம் போவோம்.

கட : ஊம்...(சொனாவிடம்) வாரேன் பிரதர்.

சொள் : செய்யுங்கள்!

கட: (போகும்போதே) என்ன ஸார், இதுமாதிரில் லாம் ஏன் ஆகுது? சுத்த பிற்போக்குத்தனம்—ரி ஆக்ஷனரி!...பூர்ஷ்வாப் பண்பு போகாத காரணம்தான். வேறென்ன! அதுதான் மார்க்ஸ் ஒரு இடத்திலே சொல்லியிருக்கிறார்...

(பேச்சொலி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து தேய்ந்துவிடுகிறது.)

சொள் : மார்க்ஸ் சொல்ல மறந்துபோனது ஒன்று உண்டு. அவர் சொல்லலே—டே பசங்களா! நீங்க மோர்க்குழம்பு வச்சி, அதிலே வெண்டக்காயும் போட்டு சாப்பிடுங்க. அப்பதான் வழவழா குழகுழா ன்னு அரசியல் பண்ணமுடியும்—சந்தர்ப்பங்களுக்கு ஏற்றமாதிரி! இப்படின்னு அவரு சொல்லலே. ஆனல் நம்ம தோழரு செய்துவருவது என்னவோ அப்படித்தான்! அட கடவுளே, மிஸ்டர் கடவுளே! ஹஹ்ஹ ஹஹாஹ்!...

## காட்சி 3.

அன்று மாலே.

சாரதா தேவி வீட்டில், பொது அறை. பல நாற்காலிகள், ஒரு மேஜை—நாகரிகப் படாடோபச் சாமான்கள் பல—எல்லாம் உள்ளன. மொத்தத்தில் ஜோரான அறை

அம்மையார் நாகரிக நாற்காலி ஒன்றில் சாய்ந்து. கால்மேல் கால் போட்டபடி உட்கார்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருக்கிருள். அம்மாள் சரியான சொஸைட்டி லேடி. பார்வைக்கு, தளதளன்னு உருட்டித் திரட்டிய மல்கோவா மாம்பழம் போல! பெங்கால் சேரியின் பகட்டு, வேறு.

வெளியே குரல் : அம்மா இருக்காங்களா?

பெண் குரல் : இருக்காங்க. நீங்க யாரு?

முதல் குரல் : சுய உரிமைக் கட்சித் தலைவர் மிஸ்டர் கனகராயர்னு சொல்லு.

வேலைக்காரி கனகம் வருகிருள்.
வந்து வாய் திறக்கும் முன்பே.

தேவி : அவரை வரச் சொல்லு!

கனகராயர் வருகிறார். கைகுவித்து : நமஸ்காரம்.

தேவி புன்னகையோடு வணங்கி : உட்காருங்கள்.

கனக : உங்களைப் பார்த்து ரொம்ப நாளாச்சு.

தேவி : நீங்க தான் என்னை ஞாபகப்படுத்திக் கொள்வதே யில்லையே!

கனக : ஞாபகப்படுத்திக் கொள்ளாமலா இப்ப நான் இங்கே வந்தேன்.

தேவி : ஹஹ. அது சரி! இப்ப உங்க அரசியல் விளையாட்டுகள் எல்லாம் எப்படி நடக்கு?

கனக : என்ன அப்படிச் சொல்லிட்டீங்க?

தேவி : என்ன?

கனக : விளையாட்டு—அப்டீன்னு!

தேவி : ஓ, அதுவா! விளையாட்டு இல்லைன்னு வினை என்றே வைத்துக் கொள்ளலாம். உங்கள் அரசியல் வினைகள் எல்லாம் எப்படி உள்ளன?

அறிவழகனார் வருகிறார். வந்து நின்று : நன்று, நன்று! தேவி போன்றவர்கள் திருத்தமிழ் பேசத் தொடங்கினால் தான் தமிழ் நன்கு வளரும், இனி தமிழுக்குக் குறைவில்லை...வணக்கம் அம்மையே!

தேவி : நீங்களா! வாங்க, வாங்க. ஏது இப்படி அபூர்வமாக! அதிலும் இருபெரும் அறிஞர்களின் இணையற்ற சந்திப்பு. ரொம்ப சந்தோஷம்.

அறி : மகிழ்வு என்று சொன்னால் மிக இனிமையாக இருக்கும், அம்மையே.

தேவி : இருந்துட்டுப் போகுது! நீங்க என்னை 'அம்மையே, அம்மையே' என்பது எனக்கு இனிமையாக ஒலிக்கவில்லை.

அறி : ஏன் அம்...அம்...அம்மணீ ?

தேவி : உங்களை 'அப்பனே' என்று மற்றவர்கள் அழைத்தால் உங்களுக்கு எப்படி இருக்கும் ?

அறி : அதிலென்ன தவறு இருக்க முடியும்? பிறவா யாக்கைப் பெரியோனான அப்பன் ஆலவாய்நாதனைக் கூட பக்தர்கள் 'அம்மையே, அப்பா, ஒப்பிலா மணியே?' என்றும், அம்மை நீ, அப்பன் நீ எனவும், அருமையாக அழைத்திருக்கிறார்கள்- அம்மை, அப்பன் என்பவை தமிழ் நுகர் செவிகளுக்கு இன்பத் தேன் அல்லவா! ஆகா.

தேவி : நீங்கள் பஜனை பண்ணத் தான் வந்தீர்களோ! அல்லது ஏதாவது பஜனைக்கு நிதி சேர்க்க வந்தீர்களா?

கனக : என்னடா எழவு இவரு! நம்ம காரியத்தைக் கூட கெடுத்துப் போடுவீர் போலிருக்குதே!

அறி : யான் உம் பணி ஒன்றையும் கெடுத்திடேன் அன்பரே. உமது கட்சியில் யானும் ஒரு...ஒரு...ஒரு...

கனக : முக்கியஸ்தர் தான்...நீங்க கேட்டீகளா, அம்மா. சுய உரிமைக் கட்சி என்று நான் தொடங்கி யிருக்கிற லட்சியக் கட்சிக்கு......

தேவி: அப்படீன்னு மற்றதெல்லாம் அலட்சியக் கட்சிகள்னு சொல்றேளா?

கனக: அப்படியொன்றும் சொல்லலியே!

தேவி: உங்கள் லட்சியம் உங்கள் கட்சி. அப்படித்தானே! உங்கள் லட்சியம் தான் உருவாயிடுத்தே. கட்சி ஆரம்பித்து அதன் தலைவராயாச்சு நீங்க. அப்புறமென்ன?

கனக: உங்களைப் போன்றவர்களின் ஒத்துழைப்பு.

தேவி: ஓ பேஷா! ஏதாவது பிரசங்கம் பண்ணனுமா? மகாநாடு திறப்பு விழா, கொடி யேற்று, தலைமை வகித்தல்—எதானாலும், ஊம், ரெடியா...

கனக: அதற்கெல்லாம் அவசியம் ஏற்படலே இப்போ. முதல்லே நீங்க ஒரு அங்கத்தினராகச் சேரனும்.

தேவி: ப்சு! இது தானா! எத்தனை கட்சியிலே தான்...

அறிவழகனார் திருத்துகிறார்: கட்சிகளிலே தான்!

தேவி: (திரும்பி முறைத்து) என்னது?

அறி: இல்லை. எத்தனை கட்சியிலே தான் என்று கூறினீர்கள். அது தப்பு. எத்தனை கட்சிகளில் என்று கூற வேண்டும் என்று சுட்டினேன்.

கனக: அட சும்மா இருமய்யா! நீர் ஒருத்தர்—சிவ பூஜையிலே கரடி விட்ட மாதிரி.

அறிவ: இதை ஆராய வேண்டும். ஏன் சிவ பூஜையில் கரடி புகவேண்டும்? அல்லது யாராவது விட

வேண்டும்? விஷ்ணு பூஜையிலோ, கறுப்பண்ண சாமி பூஜையிலோ......ஓ, புரிந்தது, புரிந்து விட்டது! சூழ்ச்சி! சிவன் தமிழர் தம் பழம் பெருந் தெய்வம். தமிழர் வணங்கி வந்த முது பெரும் கடவுள். தமிழர் தம் பூசையினைச் கெடுப்பான் வேண்டி, கயவர்கள் கரடியை ஓட்டிவிட்டிருக்க வேண்டும். ஆகா, என்ன அக்கிரமம்....தோழரே, நம் கட்சியின் லட்சியங்களில் இதுவும் ஒன்றுதல் வேண்டும்.

தேவி : ஏது? சிவபூஜையில் கரடி விடுவதா!

கனக : என்ன நீங்க...

தேவி : மறந்து போச்சு. பழி வாங்குவதற்காக, விஷ்ணு பூஜையில் கரடி ஓட்டப் போறேளாக்கும்! பேஷான யோசனை.

கனக : நான் இன்னொரு இடத்துக்குப் போக வேண்டியிருக்கு. வரட்டுங்களா?

தேவி : செய்யுங்க!

அறி : நானும் சென்று வருகிறேன். வணக்கம்.

இருவரும் வெளியேறுகிறார்கள். தேவி படிப்பில் ஈடுபடுகிருள். ஸ்ரீமான் சோணுசலம் வருகிருர்.

சோணு : படிக்கிருப் போலிருக்கு...நமஸ்காரம்.

தேவி : வாங்க, வாங்க...

சோணு : ஹஹ! பாருங்க, நான்கூட சில்லறைத் தவறு செய்துவிடுகிறேன். நீங்கள் படிக்கிறீக. நான்

அதைப் பார்த்தாச்சு. இருந்தாலும் என்ன சொல்றேன்—படிக்கிறாப்போலிருக்கு என்று! இப்படித்தான். வேலை செய்வதைப் புரிந்து கொண்டே, 'என்ன செய்றேள்? படிக்கிறேளா?'......'என்ன படிப்பா நடக்கு?' என்று அர்த்தமில்லாத பேச்சுக்கள் உதிர்ப்பாங்க. நம்மிடையே இப்படி அநாவசியமாக, தேவையற்ற, அர்த்தமற்ற பேச்சுகள் எவ்வளவோ.

தேவி: ஆமாம். நீங்க சொன்ன பிறகுதான் தெரிகிறது! சின்ன விஷயங்களில் தான் பெரிய பெரிய தவறுகள்...

சோணு: காரணமென்ன? சிந்தனை செய்யாதது தான். யாரு சிந்திக்கிறு இப்போ? சிந்தித்தாலும் சரியான படி சிந்திப்பது இல்லை.

தேவி: உங்களைப் போன்றவங்க வழிகாட்டினுல்...

சோணு: பின்னே நான் என்ன சும்மாவா இருக்கேன்! என்னைப் போல யாரு புதுசு புதுசா விஷயங்களை நுணுக்கமாக ஆராய்ந்து எடுத்துச் சொல்லு? சில விஷயங்களை நான் தெளிவு படுத்துகிறேனே, அதற்காகவே எனக்கு நோபல் பரிசு கொடுக்கலாம்! இங்கே யாரு என்னை கவனிக்கிறு? ஒரு கப் காப்பிக்குக் கூட வழி கிடையாது!

தேவி: அடடா! நான் கூட பேச்சுவாக்கிலே மறந்துட்டேனே. வந்தவாளை உபசரிக்காமே,...கனகம், ஏ கனகம்! ரெண்டு டம்ளர் காப்பி கொண்டு வா.

சோணு: நான் வந்து உதாரணத்துக்குச் சொன்னேன். இங்கே இப்ப நீங்க...

தேவி: என் கடமையை நான் செய்ய வேண்டியது தானே?

சோணு: அது என்ன புத்தகம்!

தேவி: ட்ரூ கன்பெஷன்ஸ் ஸீரிஸ்லே ஒண்ணு.

சோணு: சுவையாக இருக்குமே!

தேவி: ஆமா. இது மாதிரி இன்ட்ரஸ்டிங் புக்ஸ்தான் நான் படிக்கிறது.

சோணு: பேஷ்!

கனகம் காப்பி கொண்டு வந்து ஆளுக்கொரு டம்ளர் கொடுக்கிருள்.

சோணு: ஆகா! காப்பி ரொம்ப நல்லாருக்கு, எதையுமே கலையாகச் செய்கிற போது அதிலே தனி ஜோர் இருக்கு. அதை ரசிப்பதில் தனி இன்பம். இல்லையா?

தேவி: பின்னே!

சோணு: உங்க வீட்டில் காப்பி போடும் கலை ஜோராகப் பரிமளிக்கிறது. ஃபஸ்ட் கிளாஸ் காஃபி! ஆஹ்! ரொம்ப ஜோர்.

தேவி: கனகு, இவாளுக்கு இன்னுமொரு டம்ளர் காபி கொடு.

சோணு: இது மாதிரிக் காபி ஒரு கப்தானு சாப்பிடலாம்! பேஷான காபியாச்சே. ஆனு, எனக்கு இன்னும் ஒரு டம்ளர் போதும்!

(கனகம் உள்ளே போகிருள்)

ஆமா, தில்லையம்பலம் என்னவோ கட்சி, கிட்சின்னு சொன்னரே, என்னச்சு !

தேவி : அவர் சுத்த அளப்புன்னு ! அவராலே என்ன சாத்யம் ?

சோணு : அஹஹ ! சரியாச் சொன்னேள் ! அவன் எப்பவுமே அப்படித்தான். சோம்பேறிக் கனவு காணத்தான் லாயக்கு.

(கனகம் காப்பி கொண்டு வந்து கொடுக்கிருள்.)

தேவி : எனக்குத் தோன்றது, நீங்க கண்டிப்பாக ஒரு கட்சி தொடங்கணும். அதற்கு நான் என்னல் இயன்ற சேவை...

சோணு : (காப்பியைச் சுவைத்துக் கொண்டே) ப்சு, என்னலே என்ன முடியும் !

தேவி : ஏன்ன அப்படிச் சொல்லிட்டீங்க ? உங்களால் ஆகாதது என்ன தானிருக்கு ?

சோணு : உம்ம்...(தலையைச் சொரிந்தபடி) ம்ம்...எனக்கு ஒண்ணு தோணுது...ஒரு கட்சி, சரியானபடி வழி காட்டுகிற கட்சி, தேவைதான். அதற்கு நானே தலைவராக இருப்பதைவிட, உங்களையே தலைவராக்கி...

தேவி : (ஆச்சர்யமாக) என்னது ! நானு !

சோணு : சும்மானுட்சியும் சொல்றேன்னு நினைப்பா... என்ன சாரதா...ஓ ;...

தேவி : (சிரித்தபடி) அதனலென்ன ! நீங்கள் சாரதான்னே கூப்பிடலாம். அப்படிக் கூப்பிட நான் கொடுத்து வைக்கணுமே !

சோணு: என்ன சாரதா, அப்படி...

தேவி: உங்களைப் போன்ற பேரறிஞர்களிடம் பழக வாய்ப்பு கிடைத்திருப்பதே அதிர்ஷ்டம் தான். அதிலும் மிகவும் சொந்தமாக......

சோணு: இதென்ன! நான் சொல்லவந்ததை பூராவும் கேட்டால், நீ அப்படியே மயங்கி விழுந்திருவே போலிருக்கே!

தேவி: முதல்லே நான் ஒண்ணு சொல்லிடுறேன். நீங்க இப்படி உரிமையோடு பேசுவது தான் எனக்கு ரொம்ப சந்தோஷம் தருது. அதில்லாமே, நீங்ககூட என்னை நீங்க, வாங்க, சொல்லுங்கன்னு 'ங்க' போட்ட போது எனக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

சோணு: அது போகுது! நான் இப்போ ஏன் வந்தேன்னு...உன் சம்மதத்தைக் கேட்கத்தான். தீவிர உரிமைக்கட்சி என ஒன்று ஆரம்பிப்பது. அதற்குத் தலைவர் ஸ்ரீமதி சாரதா தேவி தான். என்ன?

தேவி: நான் எதுக்கு! நீங்களே தலைவராக...

சோணு: உனக்கு விஷயம் தெரியாது, சாரதா. முதலில் நானே தலைவன்னு சொல்லி நான் ஒரு கட்சி ஆரம்பித்தால், எல்லோரும் சுயநலம்னு ஏசுவாங்க. அதனாலே, இப்ப உன்னைத் தலைவராக்கி, கட்சிக்கு நான் உதவி செய்து, பிறகு எனது சேவையைப் பாராட்டி கட்சி என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தால்— அதுதான் முறை. மதிப்பும் கெடாது. இதுதான் என் பாலிஸி. என்ன சொல்றே?

தேவி : பேஷான யோசனை !

சோணு : அப்படியே செய்துவிடலாமல்லவா ?

தேவி : ஓ, பேஷா ! ஆனல் நான் அனுபவம் இல்லா தவ. நீங்கதான் துணையாக இருந்து...

சோணு : அதுதானே எனது எண்ணமும் !

தேவி : இன்னுமொன்று. எனது வேண்டுகோள் இது— இந்தக் கட்சி விஷயத்தில்மட்டும் நீங்கள் துணை நிற்பது போதாது. என் வாழ்விலும் துணையாக...நான் தனி வாழ்வு வாழ்வதால் எவ்வளவோ கஷ்டங்கள் உள்ளன. உங்கள்மீது எனக்கு பல வருஷங்களாகவே பக்தி. உங்களிடம் இதை எப்படிச் சொல்வது என்று தயங்கினேன். இப்போது நீங்களே தெய்வமே தானகத் தேடி வந்து அருள்புரியும்போது பக்தை தனது தபஸையும் கூறிவிடலாமல்லவா. பிறகு உங்கள் சித்தம். என் பாக்கியம்.

சோணு : இது என் பாக்கியம் என்றல்லவா சொல்ல வேண்டும்.

தேவி : என் பாக்கியம்தான்.

சோணு : சண்டை ஏன் ! நம்ம ரெண்டுபேர் பாக்கியமும் தான். (சிரிக்கிருர்கள்). சாரதா இப்படிப் பக்கத்திலே வா...இன்னும் கொஞ்சம் கிட்ட...இன்னும்...

திடீரென்று நுழைந்த தில்லையம்பலம் திடுக்கிடுகிருர் : அட கடவுளே !

கூட வந்த தோழர் கடவுள்: என்ன, என்ன மிஸ்டர் !

தில்லை: அட எழவே! உம்மைக் கூப்பிடலே ஐயா. வேறு எங்கோ இருப்பதாகச் சொல்றுகளே, அந்தக் கடவுள்மீது பழியைப் போடுறேன். அட கடவுளே! ...ஹலோ மிஸ்டர் சோணாசலம், உம்ம லீலையை இங்கேயும் காட்டத் துணிஞ்சிட்டீரே? என்ன அயோக்கியத்தனம்!

தேவி: எது அயோக்கியத்தனம்? திறந்த வீட்டிலே நாய் நுழைவதுபோல் புகுந்துவிட்டு வாய்க்கு வந்தபடி பேசுவது என்னதனமாம்?

சோணா: வீணாத்தனம்!

தில்லை: ஆச்சர்யம்! உலகம் ரொம்பரொம்ப வேகமா முன்னேறுது போலும்!

தேவி: உம்மைப்போல சோம்பிக் கிடக்கணுமாக்கும் பின்னே! எதுவும் செய்யமுடியாமல்!

தில்லை: தேவியாருக்கு திடீர் ஞானோதயம் ஏற்பட்டதா!

தேவி: இனி என்னிடம் மரியாதையாகப் பேசவேண்டும். நான் என்ன உம்ம அத்தை மகளா, உமது இஷ்டம்போல் நீர் பேச!

சோணா: ஆகா, என்ன துணிவு! இதுவன்றோ வீரம்!

தில்லை: இந்தச் சோணா வத்தி வச்சானோ என்னைப் பற்றி?

தேவி: அவர்களைப்பற்றி அவமரியாதையாகப் பேசக் கூடாது என்னிடம். உமக்கு மூளை இருந்தால் எங்குமே அப்படிப் பேசமாட்டீர்.

தில்லை : அட கடவுளே ! உலகம் ரொம்ப மாறியிருப்ப தாகத் தான் தோன்றுகிறது. என்ன சாரதாதேவி, திடீரென்று......

தேவி : தெரிந்து கொள்ளுங்கள் ! இன்று முதல் நான் ஸ்ரீமதி சாரதாதேவி சோணாசலம்.

சோணு : தலைவர், தீவிர உரிமைக் கட்சி !

தில்லை : ஒஹ்ஹோ ! அதுவா சேதி !

புரிஞ்சுடிச்சு தம்பி
தோலுரித்து முன்னே வச்ச
ஆரஞ்சுச் சுளை போலே
தெள்ளத் தெளியப் புரியுதுடா சேதி !

தேவி : இங்கே பாட்டு கீட்டு ஒண்ணும் வேண்டாம்.
(திடீரென்று சொள்ளமுத்து கத்துகிறார்)

சொள் : நமப் பார்வதி பதயே ! சாரதாதேவி தேவ சோணாசலம் ! வாழ்கவோ வாழ்க ! வாழ்க !

தில்லை : (திரும்பிப் பார்த்து, பின்னால் நின்ற சொளவி டம்) என்ன நீரும் எங்க பின்னாலேயே வந்திட்டீரா ?

சொள் : வாரா திருந்திருப்பேனுமாயின், இவை யெல் லாம் யானறிதல் எங்ஙனமோ, அம்மானே !

சோணு : தோழர்களே, மங்களகரமான இவ்வேளையிலே உங்கள் அன்பான வாழ்த்துக்களை அளித்ததற்காக நன்றி...கொஞ்சம் உட்காருங்கள். இதையே தீவிர உரிமைக் கட்சி ஆரம்ப விழாவாகவும், சாரதாதேவி திருமண விருந்தாகவும கொண்டாடி விடலாம்...... சாரதா, எல்லோருக்கும் ஃபஸ்ட் கிளாஸ் காஃபியா...

சாரதா: ரெடியா வந்துடுத்தே! கனகம் என்ன சாதாரணமானவளா!

(கனகம் எல்லோருக்கும் காபி கொடுக்கிருள்)

தில்லை: என்ன மிஸ்டர் கடவுள்! வழி நெடுக அவரு இவருன்னு யாராரையோ பற்றில்லாம் பேசினீரே பிரமாதமா! அவர்களில் யாராவது இவ்வளவு தீவிரமாக......

கடவுள்: அவர்களுடைய சரித்திரம் இத்தகைய துணிவான செயல்களுக்கு சான்று பகர்வதாகத் தெரியலே. இருந்தாலும் வீட்டுக்குப் போனதும் சில புத்தகங்களைப் புரட்ட வேண்டும்.

தில்லை: புரட்டுங்க, புரட்டுங்க!

சொள்: நீங்க தான் உலகத்தையே புரட்டுகிறேளே, வீணைப் புத்தகங்களைப் புரட்டுவானேன்!

சோணு: மிஸ்டர் சொனு! நீர் நம்ம கட்சியிலே சேருமேன்!

சொள்: சேரலாம். ஆனு அதற்கு முந்தி முக்கியமாகச் செய்ய வேண்டிய காரியம் ஒண்ணு இருக்கு.

சோணு: அதென்ன?

சொள்: தீவிர உரிமைகளின் உயிர்ச்சின்னமான நவயுவதி எவளாவது எனக்குத் துணையாக வந்து சேர்வாளான்னு பார்க்கணும். அப்படிக் கிடைக்கலே என்ருல் உங்க கட்சியில் சேர்ந்து பயனில்லை.

தில்லையம்பலம் சிரிக்கிருர். தோழர் கடவுள் சிரிப்பைத் தொடர்கிருர். சொள்ளமுத்துவும் தனது சிரிப்பை இணையவிடுகிருர்.

[காட்சி முடிகிறது!]

உருவாகிறது!

# 'எதிர்காலத் தமிழகம்'

•

ஆசிரியர்

**வல்லிக்கண்ணன்**

•

தாழ்ந்து போன தமிழகத்தின் இன்றைய இழிநிலை மாறி வருங்காலத்திலே எப்படித் திகழும்; திகழ வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லும் சிந்தனை நூல்

•

**விரைவில் வெளிவரும்**

**இது ஒரு சாந்தி நிலைய வெளியீடு**

Wrapper Printed at Jothi Press, Triplicane, Madras.